**போக்குவரத்து துறை**

**அனுப்புநர்**

பொது தகவல் அலுவலர்/ உதவிச் செயலாளர்-II,
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5,

**பெறுநர் [ ப.அ.ஒ.அ ]**

திரு. ஜாஹிர் ஹீசைன்,
பொதுச் செயலாளர்,
உரிமைக் குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம்,
56/48, பழைய ஸ்டேட் பேங்க் காலனி,
மேற்கு தாம்பரம், சென்னை-600 045.

**ந.க.எண்.42565/M2/2022** **நாள் : 23.11.2022.**

அய்யா,

**பொருள் :** தகவல் உரிமைச் சட்டம் 2005 - சில தகவல்கள் கோரப்பட்டது - வழங்குவது - தொடர்பாக.

**பார்வை :** பொது தகவல் அலுவலர்/ உதவிச் செயலர், உள்(போ.வ.1) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களின் கடிதம் எண்.4206/போ.வ.1/2022-1, நாள்.03.11.2022 உடன் இணைத்து வரப்பெற்ற திரு. ஜாஹிர் ஹீசைன், பொதுச் செயலாளர், உரிமைக் குரல் ஓட்டுநர் தொழிலாளர் சங்கம், எண்.56/48, பழைய ஸ்டேட் பேங்க் காலனி, மேற்கு தாம்பரம், சென்னை-600 045. அவர்களின் மனு, நாள்.01.11.2022. (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்: 09.11.2022)

******

பார்வையில் காணும் தங்கள் மனுவில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரப்பட்ட விவரங்களுக்கு கீழ்க்கண்டவாறு பதில் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | தமிழகத்தில் செயலி வடிவில் கால் டாக்ஸி மற்றும் ஆட்டோக்களை இயக்குகின்ற ஓலா மற்றும் ஊபர் நிறுவனங்கள் தமிழக அரசின் அனுமதியுடன் தமிழகத்தில் செயல்படுகிறதா? | தாங்கள் கோரும் விவரம் கேள்வி அடிப்படையில் உள்ளதால் தகவல் உரிமை சட்டம் (RTI) பிரிவு 2(F)-ன் படி தகவலாக வழங்க இயலாது. |
| 2 | ஓலா மற்றும் ஊபர் நிறுவனங்கள் மீது உள்துறை செயலாளரிடமோ அல்லது போக்குவரத்து துறை ஆணையரிடமோ ஓட்டுநர்களிடம் இருந்தும் பொதுமக்களிடம் இருந்தும் தொழிற்சங்கங்களிடம் இருந்தோ புகார்கள் தரப்பட்டுள்ளதா? புகார் மனுக்களின் நகல்களை வழங்குக, அந்தப் புகார் மனுக்கள் மீது என்ன விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்கவும். | ஓலா மற்றும் ஊபர் நிறுவனங்கள் மீது புகார் வரம் நேர்வில், சம்பந்தப்பட்ட சரக அலுவலர்களுக்கு விவரம் தெரிவிக்கப்பட்டு அனுமதிக்கு புறம்பாக இயக்கப்படும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| 3 | தமிழ அரசு கால் டாக்ஸிகளுக்கு கட்டண நிர்ணயம் செய்யுமா? | தாங்கள் கோரும் விவரம் கேள்வி அடிப்படையில் உள்ளதால் தகவல் உரிமை சட்டம் (RTI) பிரிவு 2(F)–ன் படி தகவலாக வழங்க இயலாது. |
| 4 | தமிழக அரசு ஓலா / ஊபர் போன்ற நிறுவனங்களை முறைப்படுத்துமா? | ஓலா மற்றும் ஊபர் போன்ற நிறுவனங்களை முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்ற விவரம் தெரிவிக்கப்படுகின்றது. |
| 5 | ஓலா / ஊபர் போன்ற நிறுவனங்கள் மீது போக்குவரத்து துறை ஆணையரகத்தில் புகார்கள் அளிக்கப்பட்டால், இந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க போக்குவரத்து துறை ஆணையருக்கு அதிகாரம் உள்ளதா? | அனுமதிக்கு புறம்பாக இயக்கப்படும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க போக்குவரத்து ஆணையருக்கு அதிகாரம் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகின்றது. |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால், இந்த பதில் கிடைத்த 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு ஆணையத்தில் அதாவது, இணைப் போக்குவரத்து ஆணையர் (விதிகள்), போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு மேல்முறையீடு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பொது தகவல் வழங்கும் அலுவலர்/
உதவிச் செயலர்–II,
சேப்பாக்கம், சென்னை–5.

**நகல் :**

பொதுதகவல் அலுவலர் / தேர்வு நிலை பிரிவு அலுவலர்,
உள்(போ.வ.1) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.